<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 03/2009

Deposition of Witness : DW 1

Name : வள்ளியம்மாள் (வயது – 77)

Father's Name /W/o : க/பெ வரதன்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : கணபதிபுரம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 31.07.2025.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. நான் பிரமாண வாக்குமூலத்தில் எனக்காக மட்டும் தான் தாக்கல் செய்தேனா அல்லது அனைத்து பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தாக்கல் செய்தேனா என்றால் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. நான் பிரமாண வாக்கு மூலத்தில் 1971, 1975 விக்கிரைய பத்திரம் பற்றி தெரிவித்துள்ளேன் என்றாலும் அதைப்பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி வாக்கு மூலம் எனக்காக மட்டும் தாக்கல் செய்துள்ளேனா அல்லது மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்காக மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்து எங்கே உள்ளது என்றால் கணபதிபுரத்தில் உள்ளது. தாவா சொத்து மொத்தம் எவ்வளவு அளவு என்றால் 2 ஏக்கர். 2 ஏக்கரா அல்லது அதற்கு மேல் உள்ளதா என்றால் 2 ஏக்கர் மட்டும் தான். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன வழக்கு போட்டனர் என்று தெரியாமல் தான் பதிலுரை தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை எனக்கு வழக்கு பற்றி தெரியும்.

3. அருணாச்சலம் மற்றும் நடராஜப்பிள்ளை சேர்ந்து முருகேசன் நாயக்கர் அவர்களிடமிருந்து 22.08.1951 தேதியில் சர்வே எண்.464 இல் 0.19 செண்ட் சர்வே எண்.116/1 இல் 1.32 செண்ட் வாங்கினார்களா என்றால் சரிதான். அருணாச்சலம் மற்றும் நடராஜப்பிள்ளை சேர்ந்து 1951 ஆண்டிலிருந்து தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 07.07.1960 தேதியில் கண்ணம்மாள் மற்றும் பலரிடமிருந்து அருணாச்சலம் மற்றும் நடராஜப்பிள்ளை சேர்ந்து சர்வே எண்.116/1 இல் 1.13 செண்ட் வாங்கினார் என்றால் தெரியாது.

4. என்னிடம் காட்டப்படும் வா.சாஆ – 2 (விக்கிரைய பத்திரம்) பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு தெரியாமல் தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வாங்கிய சொத்திற்கு மட்டும்தான் பதில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் பற்றி எனக்கு தெரிந்தும் நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.116/1 இல் மொத்தம் எத்தனை விஸ்தீரணம் என்றால் 2 ஏக்கர்.

5. சர்வே எண்.116/1 இல் விஸ்தீரணம் 2 ஏக்கர் என்று நான் சாட்சி அளித்துள்ளேன் என்றாலும் மேலும் தாவா சொத்து மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் என்று நான் சாட்சி அளித்துள்ளேன் என்றாலும் அதனால் எனக்கு வழக்கு சொத்து பற்றி தெரியாமல் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு 0.84 செண்ட் மட்டும் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**